மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
அதிக்க ஆடைகளில்
சோபிக்க கோபிராஜ்
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 14 திங்கட்கிழமை (31 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 340

# ஜே. ஆர்., பிரேமா, காமினி தலைமையே
# இனப்போரை இங்கு தோற்றுவித்தது!

## பிரதமர் சந்திரிகா சாட்டை

கொழும்பு, ஒக்ரோபர் 31

தமிழர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஜனநாயக மனித உரிமைகளை அழித்தொழித்து, இன்று நடக்கும் இனப்போரைத் தோற்றுவித்ததே ஐக்கிய தேசியக் கட்சி அரசுதான். இதற்குக் காரணமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, காமினி திஸாநாயக்கா ஆகிய தலைவர்களின் ஐ. தே. க. அரசுகளை மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

—இவ்வாறு கடந்தகால ஐ. தே. க. அரசுகளுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க.

ரூபவாகினி மூலம் நேற்று தாம் நிகழ்த்திய ஜனாதிபதித் தேர்தல் பிரசார உரையிலேயே அவர் இவ்வாறு சாட்டையடி கொடுத்தார். அந்த உரையில் பிரதமர்குமாரதுங்க மேலும் குறிப்பிட்டதாவது:

ஐக்கியதேசியக் கட்சியின் கொலைகார அரசியல் கலாசாரத்துக்கு முகங்கொடுக்க இன்னொரு கொலைகார அரசியல் கலாசாரம் தோன்றியது.

வடபகுதி மக்கள் சமாதானமாகத் தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்பட்ட போது — தங்களின் உரிமைகள் பற்றி வற்புறுத்தியபோது — ஐக்கியதேசியக் கட்சி அவர்களை அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுத்தது; அவர்களைத் தாக்கிக் கொலை செய்தது: தமிழர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆரின் கீழ்த்தர தந்திரோபாயம் ஐ. தே. கவின் போக்கில் தெரிகிறது

### "ஐலண்ட்" ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, ஒக். 31

இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டுவதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சி —

பண்டாரநாயக்க — செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைப்பதற்காக — பிளவுபட்ட இலங்கையின் வரைபடத்தை கையில் தூக்கிக்கொண்டு — சென்ற இன்னொரு எஜமானின் கீழ்த்தர தந்திரோபாயத்தை நினைவுபடுத்துகிறது.

இவ்வாறு ''த ஐலண்ட்'' நாளிதழ் தனது கடந்த சனிக்கிழமை இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

''கபட சக்திகள்'' என்ற தலைப்பில் அந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. அதில் நேரடியாக ஜே. ஆரின் பெயர் குறிப்பிடப்படாதபோதிலும் பூடகமாக அவரையே அது சுட்டிக் காட்டியதாக கருதப்படுகிறது.

''த ஐலண்ட்'' மற்றும் திவயின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரான எட்மண்ட் சமரசிங்க தமது பதவியை இராஜினாமாச் செய்த பின்னர் இத்தலையங்கம் ''த ஐலண்ட்'' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் வருமாறு:-

ஊரடங்கு நீக்கப்பட்டது; அவசரகால சட்டம் தொடர்கின்றது. கிராண்ட்பாஸ் படுகொலைகளினால் நாட்டில் பதற்றம் காணப்படுகிறது. இத் துக்ககர சம்பவத்தை வைத்து லாபம் தேட பொறுப்பு வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சில பிரிவுகள் முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டிருப்பதாக ரணில் விக்கிரமசிங்காவின் சில அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு;

## அப்பெண்ணுடன் பேச முயன்றேன் அவர் ஊமை போன்று நடித்தார்

### அருகில் இருந்த சிங்களப் பெண் ஒருவர் தகவல்

கிராண்ட்பாஸ் கூட்டத்தில் மனித குண்டாகச் செயல்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பெண்ணின் அருகில் அமர்ந்திருந்த சிங்களப் பெண் ஒருவர், அச்சம்பவம் குறித்து பொலீஸாருக்கு அளித்த வாக்கு மூலம் ஒன்றில் பல விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:

நான் அப்பெண்ணுடன் பேசுவதற்கு பலதடவைகள் முயற்சித்தேன். ஆனால் அப்பெண் தாம் ஒரு ஊமை என்பது போன்று பாசாங்கு செய்தார்.

அவருக்கு சாப்பிட கடலை கொடுத்தேன். அதனைவாங்கவும் அவர்மறுத்து விட்டார்.

நான் கூட்டம் முடிவடைவதற்குமுன்னர் வீடு திரும்பி விட்டேன்''— இவ்வாறு பம்பலப்பிட்டியைச் சேர்ந்த அச்சிங்களப் பெண் தெரிவித்திருக்கிறார்.

சந்தேக நபரான பெண்ணின் தலையை பத்திரிகையில் பார்த்ததும் சம்பவ தினம் தன்னுடன பேச மறுத்தவர் அதே பெண் என்பதை தான் அடையாளங் கண்டு கொண்டதாகவும்—

உடனே தான் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையம் சென்று தகவலைத் தெரிவித்ததாகவும் அச்சிங்களப் பெண் தெரிவித்தார். (எ)

## கணவர் காமினியின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு சிறிமா உறுதி

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய ஜனாதிபதி வேட்பாளரான திருமதி சிறிமா திஸாநாயக்கா—

தனது கணவரின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குத் தாம் உறுதி பூண்டுள்ளதாக—

நேற்று தொலைக்காட்சியில் நிகழ்த்திய தமது முதலாவது உரையில் தெரிவித்தார்

அவர் தமது ரூபவாஹினி உரையில் தெரிவித்ததாவது:

காமினியின் பூதவுடலுக்கு அஞ்சலி செய்தவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள் தந்த ஊக்கம் அவரின் பணியை முன்னெடுத்துச் செல்லும் துணிவை எனக்குத் தந்துள்ளது.

காமினியுடன் நான் வாழ்ந்த காலம் முழுவதும் நான் பகிர்ந்து கொண்ட இலட்சியம், இந்த நாட்டின் வளங்களை அபிவிருத்தி செய்யவேண்டும்; மக்களை முன்னேற்றவேண்டும் என்ற ஊக்கத்தை எனக்குத் தந்துள்ளது.

காமினியின் இலட்சியங்களை நிறைவேற்றவே நான் முன்வந்துள்ளேன். இதனை நிறைவேற்றுவதில் நான் உறுதியாகச் செயற்படுவேன்.

அரசியல் அதிகாரத்தை அடைவதற்காக தனிப்பட்ட விருப்புகளை நிறைவேற்ற முயன்ற சிலரின் செயல்கள் காரணமாக காமினியும் நானும் துக்ககரமான துன்பங்களை அனுபவித்துள்ளோம். எனினும் நாம் ஜனநாயக உரிமைகளை விட்டுக்கொடுக்கவில்லை. —என்று தெரிவித்தார்.

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 31

தீபாவளித் திருநாளை முன்னிட்டு கிளாலி-பூநகரி விசேட படகுச்சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [ஐ]

## யாழ். வந்தவர் வவுனியாவில் கைது

கொழும்பு, ஒக். 31

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல வவுனியா வந்தடைந்த தமிழ்ப் பெண் ஒருவரை தாண்டிக்குளம் தடுப்பு முகாமில் வைத்து படையினர் கைது செய்தனர் என்றுதெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

சோதனைச் சாவடியில் வைத்து இவரைச் சோதனையிட்ட படையினர் இவரிடமிருந்து முக்கிய புகைப்படங்கள் அடங்கிய அல்பம் ஒன்றை கண்டுபிடித்தனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (எ)

## தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக். 31

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்படப் பல்வேறு அரச திணைக்களங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 27 ஆயிரம் ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். [உ-ஐ]

## பிரதமர் மீதும் வசைமாரி! கல் வீச்சு!!

கொழும்பு, ஒக். 31

படுகொலையுண்ட காமினி திஸாநாயக்காவுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக சென்ற சமயம் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு வசைமாரி பொழியப்பட்டது; அவரது வாகனத்தின் மீதும் அமைச்சர்களின் வாகனங்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன.

— நீதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் இத்தகவலை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரத்தில் கவலை தரும் வன்முறைப் போக்கு உருவாகி வருவதாகவும் அவர் கூறினார். (உ-ஐ)

## முச்சந்தி முரளி



உவர் முகம்மது காக்காதிலை தடுமாறுகிறார் கண்டியளோ.....!

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

கொழும்பு, ஒக் 31

வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பகுதியில் தாழமுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

சூறாவளி வேகத்தில் உருவெடுத்துள்ள அந்தத் தாழமுக்க மையம் வடமேற்குத் திசையில் நகர்ந்து நேற்றிரவு தமிழகத்துக்கு மேலாகக் கரையைக் கடக்கவிருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தது.

அந்தச் சூறாவளி வேகக் காற்று இலங்கையின் காலநிலையைப் பெரிதும் பாதிக்க மாட்டாது என்றும்—

எனினும் வடக்கு, வடகிழக்கு கரையை அடுத்துள்ள கடற்பகுதி கொந்தளிப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டது. [உ-ஐ]

## 60 லட்சம் ரூபா சன்மானம்

கொழும்பு, ஒக். 31

காமினி கொலையுண்டதற்குக் காரணமான பாலத்துறை குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து தகவல் தருவோருக்கு ஐம்பது லட்சம் ரூபாவும் —

குண்டை வெடிக்கச் செய்தவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணை அடையாளம் காண்பதற்கு உதவும் தகவலைத் தருவோருக்கு பத்து லட்சம் ரூபாவும் சன்மானம் தரப்படும் என பொலீஸார் அறிவித்துள்ளனர்.

## வசந்தராஜா பதவி ஏற்பு

கொழும்பு, ஒக். 31

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக திரு. எம். வசந்தராஜா கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக பதவியேற்றார். (எ)

## விளையாட்டு விழாவில் இன்று

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் விளையாட்டு விழாவில் இறுதிநாளான நேற்றிரவு மழை காரணமாக நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட விளையாட்டுகள் இன்று நடைபெறவிருக்கின்றன.

தாச்சிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் வீதியிலும்—

கராட்டிக் கண்காட்சி, மல்யுத்தம் இறுதிப் போட்டிகள், குத்துச் சண்டைப் போட்டிகள் ஆகியன நல்லூர் இளங்கலைஞர்மண்டபத்தில் மாலை 4 மணி முதலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 23 ஆம் திகதி இரவு படையினருடன் இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் மறுநாள் வீரச்சாவடைந்தார்.

லெப்டினன்ட் ரகுமான் அல்லது பிரான்ஸ் என அழைக்கப்படும் கந்தசாமி மோகன் — [மட்டக்களப்பு] என்ற போராளியே வீரச்சாவடைந்தார். [ஐ]

## அவசரகாலச் சட்டத்தை காலாவதியாகவிட முடிவு

கொழும்பு, ஒக். 31

காமினியின் கொலையை அடுத்து கடந்த திங்கள் அதிகாலை பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட மாட்டாது; அதனைக் காலாவதியாக விடுவது என அரசு முடிவு செய்துள்ளது.

அவசரகாலச் சட்டம் புதிதாகப் பிறப்பிக்கப்பட்டால் அது அடுத்த பத்து நாட்களின் பின் காலாவதியாகிவிடும் என்றும் —

அந்தப் பத்து நாட்களுக்குள் நாடாளுமன்றம் கூடி அதுபற்றி ஆராய வேண்டும் என்றும் —

அப்போது அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் தீர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும்

### எம். எச். முகம்மது தெரிவிப்பு

லண்டன், ஒக். 31

இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தை மூலமே காணப்பட வேண்டும்.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முகம்மது பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்காவின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று முன்னர் கூறியிருந்த எம். எச். முகம்மதுவிடம் யுத்தம் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமா அல்லது சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண்டுமா எனக் கேட்கப்பட்ட போது —

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய சம்பள திட்டத்தின்கீழ் ஆசிரியரின் சம்பள விவரம்

கொழும்பு, ஒக். 31

புதிய ஆசிரிய சேவைத் திட்டத்துக்கு அமைய அதிகரிக்கப்பட்டுள்ள புதிய சம்பளங்கள் பற்றிய விவரம் இவ்வாரம் வர்த்தமானி மூலம் வெளியிடப்படும்.

ஆசிரிய சேவை கடந்த 6 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி சகல பாடசாலை ஆசிரியர்களும் 3 வகுப்புகளிலும், ஐந்து தரங்களிலும் அடக்கப்பட்டுள்ளனர்.

முதலாம் வகுப்பு ஆசிரியர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் விசாரணைக்கு சஜித் உள்ளாகலாம்

ரூபவாஹினி மற்றும் பத்திரிகைகளின் படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சஜித் பிரேமதாஸாவுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

அத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் புதல்வன் சஜித் இருந்து செயல்பட்டார் என்று பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சஜித் பிரேமதாஸாவை பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## சமாதான முயற்சியை தீவிரப்படுத்த வேண்டும்

### முற்போக்கு முன்னணி வற்புறுத்து

கொழும்பு, ஒக். 31

வடக்கு, கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொ. ஐ. முன்னணி அரசு முன்னெடுத்த சமாதான முயற்சியை மேலும் தீவிரப்படுத்தவேண்டும்.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரிய புல்லேகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணவேண்டும். அதற்கான சாதகநிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

வடபகுதி மக்களுக்குத் தேவையான வசதிகள் யாவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காமினியை பார்த்து சிரித்தபோது தலையை திருப்பிக்கொண்டு போனார்

### தமது பதவிஏற்பு வைபவம் குறித்து சந்திரிகா

கொழும்பு, ஒக். 31

நான் பிரதமராக பதவி ஏற்ற தினத்தன்று காமினி திஸாநாயக்கா எனக்கு வாழ்த்துக் கூட தெரிவிக்கவில்லை. நான் அவரைப் பார்த்து சிரித்தபோது அவர் தலையைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார்.

பிரதமர் சந்திரிகா கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''இறப்பதற்கு முன்னர் காமினி என்னைச் சந்திக்க விருப்பம் தெரிவிக்கவில்லை. அப்படி அவர் விருப்பம் தெரிவித்து அதனை நான் ஏற்கவில்லை என்று தெரிவிப்பது தவறாகும்'' — என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. இலோ ரூபா 140/-. அ. செல்வராசா, வளாக ஒழுங்கை (நல்லாயன் சேச்லேன்), திருநெல்வேலி. (கொக்குவில் புகையிரத நிலையம் முன்பாகவும் பெறலாம்). (33574)

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு, நல்லூர் வீடியோ [ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33575)

### தேவை

சுன்னாகத்திற்கு புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஓர் ஐஸ்கிறீம் கொம்பனிக்கு அனுபவம் உள்ள ஓர் பங்காளர் தேவை. பில் கிளாக் பரிமாறுவோரும் தேவை. நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். மே/பா 38, மே/பா 82, உதயன் சேவை நிலையம், சுன்னாகம். (7687)

### சோதிடம்

4 – 11 - 94இல் வியாழன் மாற்றம் அதிஷ்டமானதா? கல்வி, தொழில், பிரயாணம், திருமணம், ஜாதகக் குறிப்புடன் நேரில் சந்திக்கவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோயில் வீதி, நல்லூர். (33566)

### நாவல், நாடகம்

மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் 45 வருடங்களாக எழுதிவரும் அராலியூர் சுந்தரம்பிள்ளையின் ''முதலாம்பிள்ளை'' 10 நாடகங்கள் ''அக்கரை சீமையில்'' ஆபாசமற்ற சுவையான நாவல். பூபாலசிங்கம் புத்தகசாலை. (33488)

### ஜோஸ்யர்மலர்

வழமைபோல் ஜோஸ்யரின் வியாழமாறுதல், ஆறு ரூபாய்க்கு அற்புதமான சிறப்பு மலராக இவ்வாரம் வெளிவருகின்றது. படித்து முடிந்ததும் எமக்கும் ஒரு வரி எழுதுங்கள். இது ஓர் சோதிட அறிவுக்கருகூலம். [33555]


## நாடாளுமன்றின் விசேட அமர்வு

நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இதற்கான ஆணையைப் பிறப்பித்துள்ளார்.

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, சென்ற 24 ஆம் திகதி பொ. ஐ. மு. அரசின் சிபார்சின்மீது ஜனாதிபதி விஜேதுங்க அவசரகாலச் சட்டத்தை பிரகடனஞ் செய்தார்.

இப்பிரகடனம் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து அடுத்த 10 தினங்களுக்குள் நாடாளுமன்றம் அதனை அங்கீகரிக்க வேண்டும் என்று அரசமைப்பு கூறுகிறது.

அதற்கிணங்க நாடாளுமன்றம் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்குமுன் கூட்டப்பட்டாக வேண்டும். அதற்கமையவே ஜனாதிபதி இப்பிரகடனத்தை வெளியிட்டுள்ளார். (இ-4)

## வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன

ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான வாக்குச் சீட்டுகள் யாவும் அச்சிடப்பட்டு விட்டன.

தேர்தல் திணைக்களம் இத்தகவலை வெளியிட்டது.

ஒரு கோடிக்கு அதிகமான வாக்காளர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர். (எ)

## இன்று

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் புரட்டாதி, ஐப்பசி மாதக் கொடுப்பனவுகள் இன்று திங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணி வரை யாழ். வர்த்தக வங்கியில்இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நாளை

உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது. (எ-152)


## தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம்

### யாழ். மாவட்டம்

மேற்படி ஒன்றியத்தின் கூட்டமொன்று எதிர்வரும் 03-11-94(வியாழன்) காலை9-30மணிக்கு யாழ்.நகர் விக்ரோரியா வீதியிலமைந்துள்ள கலாலயா (தொழிற் பயிற்சியகம்) இல் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால், மேற்படி ஒன்றியத்தில் பதிவு செய்த, இதுவரை பதிவு செய்யாத அனைத்து நிறுவன உரிமையாளர்கள்/நிர்வாகிகள் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

- செயலாளர்.

(சி/9567)

## G. C. C.

### வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(பழைய O. P. D. முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை [E. N. T.] முறிவு மகப்பேறு, சத்திரசிகிச்சை சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம். சரும நோய்கள் என்பவற்றுக்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் (E. C. G.) மற்றும் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் இங்கு நடைபெறுகின்றன.

—நிர்வாகி.

(33570)


## இ. தொ. கா. முடிவில் மாற்றம் இராது

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிப்பது என்ற இ. தொ. காவின் முடிவை காமினி திஸாநாயக்காவின் படுகொலையினால் ஏற்பட்ட வேட்பாளர் மாற்றம் மாற்றிவிடாது.

இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் முன் கண்டவாறு தெரிவித்தார்.

''இ. தொ. கா. ஆதரவாளர்கள் தங்கள் மனச்சாட்சியின்படி வாக்களிக்குமாறு நாம் கோரியுள்ளோம். ஆகவே காமினி போய் சிறிமா வந்துள்ளது. எமது இம் முடிவை மாற்றாது'' — என்றும் அவர் சொன்னார். (எ)

## உலகப் படம் திரை நீக்கம்

அளவெட்டி, ஒக். 31

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை ஒட்டிய நிகழ்வில் கல்லூரியின் சமூகக்கல்வி மன்றத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட உலகப் படத் திரை நீக்கம் இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது. உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சு. தற்பரானந்தன் அதனைத் திரை நீக்கம் செய்து வைப்பார். (ஐ-13)


## அகில இலங்கைத் தமிழ் மாமன்றத்தின் பரிசளிப்பு விழா - 1994

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

காலம்: 31 — 10 — 1994 திங்கட்கிழமை மாலை 4.00 மணி

தலைவர்: திரு. இ. பசுபதீஸ்வரன்

பிரதம விருந்தினர்: பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்: மங்கை (கலை பண்பாட்டுக் கழகம்)
திரு. சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலயம் – 2)
திரு. சிவ. மகாலிங்கம் (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)
திரு. வே. பொ. பாலசிங்கம் (யாழ். மாநகர ஆணையாளர்)
திரு. இ. ஜெயராஜ் (அ. இ. கம்பன் கழக அமைப்பாளர்)
திரு. க. கனகராசா (மில்க்வைற் அதிபர்)

### பரிசில் பெறுவோர்

#### மொழித்திறன் தேர்வு – 1993 (மாவட்ட மட்டத்தில்)

ஆண்டு 6 — 1. மு. வித்தியா — யா/சுண்டுக்குளி ம. க.
2. நா. சர்மிளா — யா/சுண்டுக்குளி ம. க.
3. யோ. திவாகர் — யா/மானிப்பாய் மெம்மோறியல்

ஆண்டு 7 — 1. ச. ஹைமிபிறேமிளா — யா/சுண்டுக்குளி ம. க
2. கி. துஷ்யந்தி — யா/வேம்படி ம. க.
3. க. தர்சிகா — யா/சுண்டுக்குளி ம. க.

ஆண்டு 8 — 1. ஸ்ரீ. சுமித்திரா — யா/சுண்டுக்குளி ம. க.
2. க. சசிந்தினி — யாழ். வேம்படி ம. க.
3. சி. நர்மலா — யா/வேம்படி ம. க.

ஆண்டு 9 — 1. சி. குமுதினி — யா/வேம்படி ம. க.
2. ப. கிருஸ்ணகோபி — யா/வேம்படி ம. க.
3. வி. சங்கீதா — யா/வேம்படி ம. க.

ஆண்டு 10 — 1. சா. உதயஇந்து — யா/கொக்குவில் ஞானபண்டிதா
2. சி. லுசாந்தி — யா/சுண்டுக்குளி ம. வி.
3. க. தயாலினி — யா/இந்து ம. க.

ஆண்டு 11 — 1. சி. சாந்தி — யா/உடுவில் ம. க.
2. பூ. உஷாநந்தினி — யா/உடுவில் ம. க.
3. ஸ்ரீ. தாட்சாயினி — யா/இந்து ம. க.

#### பொது அறிவுத்திறன் போட்டி – 1994 (மாவட்ட மட்டத்தில்)

1. ம. அனெற்செல்வினி — யா/கன்னியர்மடம் ம. வி.
2. மு. மாதங்கி — யா/கைதடி விக்கினேஸ்வரா ம. வி.
3. மு. சாமினி — யா/கைதடி விக்கினேஸ்வரா ம. வி.

குறிப்பு:

பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

### சமய அறிவுத்திறன் போட்டி

1. இருபாலை கற்பகவிநாயகர் ஆலய சமய அறிவுத் திறன் போட்டி – 1994

   1. செல்வி நா. சகுந்தலா V–H லேன், இருபாலை
   2. செல்வி த. மதனிகா நாவற்குழி
   3. செல்வன் மு. டுக்ஷன் கல்வியங்காடு

ஆறுதல பரிசு பெறுவோர்:

த. மர்மதனி – நாவற்குழி, யோ. விமலன் – கல்வியங்காடு, க. முருகதர்ஷினி – கோப்பாய் தெற்கு, சு. பாலகௌரி – கொக்குவில் மேற்கு, சொ. சொர்ணேஸ்வரன் – கல்வியங்காடு, சு. தயாளினி – ஆடியபாத வீதி, மு. அனுசுயா – நாயன்மார்கட்டு, பே. பத்மினி – கோப்பாய் தெற்கு, இ. அனுஷியா – கல்வியங்காடு, ஜெ. வதனி – இருபாலை.

2. நல்லூர் கந்தசுவாமி ஆலய சமய அறிவுத் திறன் போட்டி – 1994

   1. மு. சுகன்யா நல்லலக்சுமி அவனியு, நல்லூர் வடக்கு
   2. க. அனுஷா கல்வியங்காடு
   3. த. தயாளினி 41/49, செட்டியார் தோட்டம், நல்லூர்

ஆறுதல் பரிசு பெறுவோர்:

க. லலிதசொரூபினி - கொழும்புத்துறை வீதி, நா. கலாதரன் - நாவற்குழி, உ. உமிலாதேவி - இருபாலை, மு. மயூரன் – நல்லூர் வடக்கு, இ. இளங்குமரன்- 106, ஐயனார் கோயில் வீதி யாழ்., சி. கணேஸ்குமார் – சுன்னாகம் கிழக்கு, கி. குருபரன் – கொக்குவில் மேற்கு, ந. குகதர்மினி – தச்சன் தோப்பு, இ. இளமுருகன் - ஐயனார் கோயில் வீதி யாழ்., ம. பபிலா – V. C. C. மாவிட்டபுரம்.

★ பரிசு பெறுவோர் பி. ப. 3-30 மணிக்கு முன் வருகைதந்து வரவை பொதுச் செயலாளரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பரிசளிப்பினை தொடர்ந்து இசை நடன நிகழ்வுகள் இடம்பெறும்.

— [illegible]
பொதுச் செயலாளர்

(33576)

## ★ பேரரசி வண்ணச் சோலை ★

(முந்திய மகாராணி புடைவை மாளிகை)

புதுக்கோலத்துடன் அதே முகவரியில்!

புதிய சோலையில் உங்கள் நெஞ்சம் கவரும் வண்ணங்களில்

- ✶ ஆண்கள்
- ✶ பெண்கள்
- ✶ பிள்ளைகளுக்கான சகல ஆடைகளும்

தீபாவளிக்கெனத் தருவிக்கப்பட்டவை!

★ நியாய விலை!

★ தரம் உத்தரவாதம்!

பேரரசி வண்ணச் சோலை

50, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

[சி–9566]


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்

## 1995 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கடைகள் என்பவற்றை 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1994 – 11 – 15 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபைச் செயலாளரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 1994 – 11 – 14 ஆம் திகதி நண்பகல் 12–00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை, ''விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும் – இணைப்பிரதியை, ''பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1994 – 11 – 15 ஆம் திகதி நண்பகல் 12–00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1994 – 11 – 15 ஆம் திகதி பி.ப 2–00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் உப அலுவலகம்:** | | | | |
| 01. சுன்னாகம் மத்திய சந்தை (மாதாந்த வாடகைக்குரிய கடைகள் தவிர்ந்த) | — | 100/- | 2000/- | 3,15,000/- |
| 02. சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை (மீன் சந்தையில் அமைந்துள்ளது) | 100/– | 100/- | 2000/– | 2 25,000/– |
| 03. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை (மீன்சந்தையில் அமைந்துள்ளது) | 100/– | 100/– | 1000/– | 28,000/– |
| 04. உடுவில் கிளிச்சந்தை | — | 100/– | 1000/- | 4,050/– |
| 05. உமல் கடதாசி விற்பனை செய்யும் உரிமை (மீன் சந்தையில் அமைந்துள்ளது) | — | 50/– | 1000/– | 1,600/– |
| 06. பின்வரும் 5 கடைகளும் மீன்சந்தையில் அமைந்துள்ளன கருவாட்டுக்கடை இல, 3 | 60/– | 50/– | 100/– | 2,350/– |
| 07. கருவாட்டுக்கடை இல. 4 | 60/- | 50/– | 100/- | 7,050/– |
| 08. ,, ,, 5 | 60/– | 50/– | 100/– | 6,200/– |
| 09. ,, ,, 6 | 60/– | 50/– | 100/– | 2,300/- |
| 10. ,, ,, 7 | 60/– | 50/- | 100/- | 2,300/– |
| 11. சுன்னாகம் சந்தையிலுள்ள உள் கடைகள் கடை இல. 19 | 175/– | 100/– | 1000/– | 50,000/– |
| கடை இல. 31 | 175/– | 100/– | 1000/– | 50,000/– |
| **2. உடுவில் உப அலுவலகம்:** | | | | |
| 01. மருதனார்மடம் | — | 100/- | 2000/- | 75,500/– |
| 02. இணுவில் சந்தை | — | 100/– | 1000/– | 3,000/– |
| 03. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக்கடை | — | 50/– | 500/– | 38,200/– |
| 04. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | — | 50/- | 500/- | 80,100/– |
| 05. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | — | 50/- | 500/– | 35,000/– |
| 06. இணுவில் சந்தை வெலிக்கடைகள் 1. கடை இல. 1, கடை இல. 2 | — | 25/– | 100/– | 900/– |
| 2. ,, 3 | — | 25/– | 100/– | 500/– |
| 3. ,, 9 | — | 25/– | 100/– | 500/– |
| 4. ,, 13 | — | 25/– | 100/– | 1,100/– |
| **3. ஏழாலை உப அலுவலகம்:** | | | | |
| 01. மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | — | 50/– | 300/– | 55,000/– |
| 02. ஏழாலை தெற்கு சந்தை | — | 25/– | 50/– | 500/– |

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம், 26 – 10 - 1994

[சி–5734]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## புதிய அலையும் பழைய வெள்ளமும்

பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா மீது, ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போகிறார்களாம். கட்சியின் உதவிச் செயலாளர் காமினி ஜெயவிக்ரம பெரேரா இதனை அறிவித்திருக்கிறார்.

அவ்வாறு செய்யப்படின், இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் நீண்ட காலத்தில் நடக்கும் புதிய நிகழ்வாக இது அமையும்.

அது ஒரு புறமிருக்க —

காமினி திஸாநாயக்காவின் கொலைக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு பிரிவினர் காரணமாக இருக்கக்கூடும் என்று பொலிஸ் மா அதிபர் பி. பி. ஸிக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டதற்காகவே, அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

ஒரு சம்பவம் நடந்தால் அதில் சம்பந்தப்பட்டவர் யார் என்பதனை தகுந்த, நியாயமான விசாரணையின் பின்னரே கண்டு பிடிக்க முடியும். அதுவரை பலர் மீது சந்தேகம் எழும். குறிப்பிட்டவர்களும் அதனைச் செய்திருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுவதும் உண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியில் பல பிரிவுகள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த பரம இரகசியம். காமினி கட்சியின் உயர்மட்டத்துக்கு வந்தவிதம் கட்சிக்குள் பலருக்கு அதிருப்தியை உண்டாக்கியது. எனவே அக்கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலையைச் செய்திருக்க வாய்ப்புண்டு என்று ஊகிப்பதில் அல்லது சந்தேகப்படுவதில் என்ன தப்பு? ஆதாரம் கிடைக்காவிடில் அது ஊகமாகவே போய்விடும்.

ஆகையால், கொலைச் சம்பவ விசாரணைக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் ஐ. தே. கட்சிக்காரரும் கொலையில் ஈடுபட்டிருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுவதாக பொலீஸ் மா அதிபர் கூறியதில் தப்பு என்ன?

பிரதமர் சந்திரிகா, விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்து காமினியைக் கொல்வித்தார் என்று ஐ. தே. கட்சிக்காரர் ஆதாரம் இல்லாமல் கூறமுடியுமானால், ஐ. தே கட்சி மீதும் ஒரு சந்தேகம் உண்டு என்று சொல்வதில் என்ன தவறு? ஐ. தே. கட்சிதான் கொலையைச் செய்தது என்று பொலிஸ் மா அதிபர் கூறவில்லையே!

காமினி கொலையைத் தமக்குச் சாதகமாக்கி, ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி படாதபாடுபடுகிறது. இது வெளிப்படையாகவே தெரிகிறது. சந்திரிகாவுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்வதோடு நிற்காது, வழமை போல தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வுகளை சிங்கள மக்களிடம் மீண்டும் வளர்க்கவும் அக்கட்சி திட்டமிட்டுச் செயற்படுகிறது.

சிங்கள மக்களைத் தமிழர்களுக்கு எதிராகத் திசை திருப்பினால்தான் தாம் அரசியல் நடத்தலாம் என்பதனை நன்கு தெரிந்தவர்கள் ஐ. தே. கட்சியினர். அதிலேயே அரசியல் நடத்தி ருசி கண்டவர்கள். அவர்களுக்குப் பக்கபலமாக பேரினவாதமும், இராணுவத்தில் ஒரு பகுதியும் சேர்ந்து கொள்ளும் என்பது சொல்லாமலே தெரிய வேண்டியது.

எனவே, தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும், போர் நிறுத்தப்பட வேண்டும், சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஒகஸ்ட் பொதுத் தேர்தலின் போது தென்னிலங்கையில் முன்னெடுக்கப்பட்ட புதிய சிந்தனைப் போக்கை மாற்றி, சிங்கள மக்களைப் பழைய வழிக்கு இட்டுச் செல்லாமல் தடுப்பது அவசியம். சந்திரிகா அணியின் பிரசார உத்தியிலும் அதனை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதிலுமே அது தங்கி உள்ளது.

சமாதானம், நல்லுறவு என்ற புதிய அலையை, இனவாதம் என்ற பழைய வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்வதே இன்றைய தேவை.

வெள்ளம் தலைக்கு மேல் போகாமல் தடுக்காவிடில் சந்திரிகாவின் அரசியலும் மூழ்கிப்போகும் அபாயம் உண்டு.

# சமாதானத்துக்காக வாதாடுவோர் தோற்கடிக்கப்பட மாட்டார்கள்

## காமினி இரங்கலுரையில் ஆயர் கென்னத்

கொழும்பு, ஒக். 31

சமாதானத்துக்காக வாதாடுபவர்கள் தோற்கடிக்கப்பட மாட்டார்கள்.

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, முன் கண்டவாறு தெரிவித்தார்.

படுகொலையுண்ட ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்துகையில் ஆயர் கென்னத் பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்தால் அன்றி, நாட்டின் அபிவிருத்தி வெற்றி பெற முடியாது — என்றும் அவர் கூறினார்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னரே வறுமையை ஒழிக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரமண நிக்காயாவின் மகாநாயக்கரான மடிஹே பஞ்ஞசீசதேரர் பேசும் போது, நாட்டில் சுபீட்சம், பாதுகாப்பு நிலவ ஐக்கிய உணர்வு தேவைப்படுகின்றது என்று தெரிவித்தார்.

இதனை ஏற்படுத்துவதற்காக சமாதானத் திட்டம் ஒன்றை வகுக்க மதப்பெரியார்கள் மற்றும் கல்விமான்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

துணை ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ் பேசுகையில் —

நாட்டில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தக் கூடிய தலைமை தான் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகிறது என்றும் —

அப்படியான தலைமைக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் — தெரிவித்தார்.

வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ராஜேஸ்வரானந்தாஜி, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, இ. தொ. கா. தலைவர் தொண்டமான் ஆகியோரும் இரங்கலுரை நிகழ்த்தினர். [எ]

## காமினி திஸாநாயக்கா கொலை;

## விசாரணையைக் குழப்ப ஐ.தே. கவினர் முயற்சியாம்

கொழும்பு, ஒக். 31

காமினி திஸாநாயக்கா படுகொலையுண்ட சம்பவம் குறித்து நடைபெறும் விசாரணையை குழப்பும் முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

தகவல்துறைப் பிரதி அமைச்சர் ஜனாப் அலவி மௌலானா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

சமாதானப் பேச்சுகள் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாது, இராணுவ நடவடிக்கை மூலம் முடிவு காணவேண்டும் என்பது தான் ஐ. தே. கவினரின் நோக்கமாக இருக்கிறது. வடபகுதியில் உள்ள 5½ லட்சம் தமிழர்களும் எம் மக்கள் தான் என்பதை அவர்கள் மறந்து விட்டார்களா? — என்றும் அவர் தமது அறிக்கையில் கேட்டுள்ளார்.

காமினி கொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் சபாநாயகர் எம்.எச். முஹம்மது செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கு முகமாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. (ஓ)

## புலிகளின் குரல் வானொலியில்

**31 — 10 — 1994**
**திங்கள் இரவு**

- ★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8 - 20 — தாயகப் பாடல்கள்.
- ★ 8 - 30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பகுதி நேர விரிவுரையாளரும், மூத்த நாடகக் கலைஞருமான குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுடனான செவ்வி.

**01 — 11 — 1994**
**செவ்வாய் காலை**

- ★ 7 - 02 — மாவீர வணக்கம்.
- ★ 7 -15 — இன்றைய தாரகை
- ★ 7 – 30 — செய்திகள்.
- ★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்.

## அணைக்கட்டு பாதுகாப்பு

வடமராட்சி கிழக்கு, அம்பன் குடத்தனைப் பகுதியிலுள்ள வெள்ள வாய்க்கால் அணைக்கட்டுப் பாதுகாப்பு வேலைகள் தேச நிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமத்தினுள் வெள்ளம் வராமல் தடுத்து இக்கிராம மக்களை வெள்ள ஆபத்திலிருந்துபாதுகாக்கும் முகமாக பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## பளைப் பகுதியில் பனை விதை நடுகை

தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற் கொள்ளப்பட்டு வரும் பிரமாண்டமான கற்பகச் சோலை பனை நடுகைத் திட்டத்தின் கீழ் பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் 10 ஆயிரம் பனை விதைகளை நடுகை செய்துள்ளது.

தமிழீழத்தில் உள்ள பனை வளத்தை 2,000 ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்கம் கொண்ட இத் திட்டத்தின் இவ்வருட நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக இப் பனை நடுகை அமைந்துள்ளது. (எ)

## ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க

# சர்வதேச அவதானிகள் 25 பேரே வருகின்றனர்!

கொழும்பு, ஒக். 31

இம்முறை 25பேர் கொண்ட சர்வதேச அவதானிகள் குழுவே ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க அழைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா அறிவித்திருக்கிறார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இந்த அவதானிகள் குழுவில் அங்கம் வகிப்பர்.

கடந்த ஒகஸ்ட் 16ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது 14 நாடுகளைச் சேர்ந்த 44 அவதானிகள் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்டனர் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

## ரணசிங்க எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 31

சிறிமா திஸாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதற்கு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஏ. ஜே. ரணசிங்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## வடக்கு - கிழக்கில்

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப விசேட நடைமுறைகொண்டு வரப்படும்

## கல்வி அமைச்சர் இணக்கம்

வடக்கு – கிழக்கில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தனியான விசேட நடைமுறை ஒன்று கடைப்பிடிக்க வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த கோரிக்கையை கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான ஏற்றுக்கொண்டார்.

இக்கோரிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அமைச்சரிடம் நேரில் சமர்ப்பித்தார்.

வடக்கு–கிழக்கில் 1990ஆம் ஆண்டின் பின்னர் ஆசிரியர் தொகை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும்—

ஆனால் தென்பகுதியில் ஆசிரியரின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரத்தினால் அதிகரித்துள்ளது என்றும் அவர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார்.

எனவே வடக்கு – கிழக்கில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப விசேட நடைமுறை ஒன்று கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அமைச்சருக்கு வலியுறுத்தப்பட்டது.

## சுவர்ண்சிங் காலமானார்

புதுடில்லி, ஒக். 31

இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் சர்தார் சுவர்ண் சிங் நேற்று முன்தினம் இரவு காலமானார். அவருக்கு வயது 83

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது இவர் வெளியுறவு அமைச்சராக பதவி வகித்தார். (எ)

## இலங்கை வங்கியினால்

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கப்படும்

## இரண்டரைக்கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 31

வடபகுதி விவசாயிகளுக்கு விவசாயக் கடன்களை மீண்டும் வழங்குவதற்கென இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலயத்திற்கு 2 கோடி 50 லட்சம் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டுக்கு பின்னர் வடபகுதி விவசாயிகளுக்கு வங்கிக் கடன்கள் வழங்கப்படுவதை இலங்கை வங்கி நிறுத்தி வைத்திருந்தது. மீண்டும் விவசாயக் கடன்களை வழங்க இலங்கை வங்கி தனது யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கென 5 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்யும் படி இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட அலுவலகம் தனது தலைமைப்பீடத்தைக் கேட்டிருந்தது. எனினும் வங்கித் தலைமையகம் 2 கோடி 50 லட்சம் ரூபாவையே அனுமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளில் ஏற்கனவே பெற்ற விவசாயக் கடன்களை திருப்பிச் செலுத்திய மற்றும் செலுத்திவரும் விவசாயிகளுக்கும் புதிதாகக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இருந்து விவசாயக் கடன்கள் வழங்கும் பணி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 2 கோடி 50 லட்சம் ரூபா பணம், 2 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு கடன்களை வழங்கப் போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

## திருத்த வேலைக்கு நிதி ஒதுக்கீடு

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த அச்சுவேலி மகாவித்தியாலய கட்டடங்களைத் திருத்தி அமைப்பதற்கு கல்வித் திணைக்களத்தினால் 2½ லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 25 ஆம் திகதி அச்சுவேலி மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடம், மலசல கூடம் என்பன முற்றாக சேதமடைந்தன. (எ-11)

# இம்முறை 367 ஹெக்டேர் நெல் வயல் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

மழையினால் யாழ். மாவட்டத்தில் 367 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெற்செய்கை முற்றுமுழுதாக அழிந்து விட்டதாக யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு. த சிவயோகநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடத்திய ஆய்வு மதிப்பீட்டிலேயே இவ்வாறு கணிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 10ஆயிரத்து366 ஹெக்டேர் நிலப்பரப்பு வயல் நிலம் உள்ளது.

அதில் 10ஆயிரத்து 250 ஹெக்டேர் நிலப்பரப்பில் தான் இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிலும் 367 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெற்செய்கை வெள்ளத்தினால் முற்று முழுதாக அழிந்துள்ளன.

போதனாசிரியர் பிரிவுகளின் படி நல்லூரில்—10ஹெக்டேரும், சண்டிலிப்பாயில்—310 ஹெக்டேரும், உடுவிலில்—5 ஹெக்டேரும் தொல்புரத்தில்—22 ஹெக்டேரும், [illegible]—10 ஹெக்டேரும் [illegible]—10 ஹெக்டேரும் பாதிக்கப்பட்டுள்ளன. (ஓ-17)

## 500 பேர் விசாரணை

கடந்த 23ஆம் திகதி இடம் பெற்ற கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி இது வரை 500க்கு அதிகமானோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவும் மற்றும் 52பேரும் படுகொலையுண்டனர் என்பது தெரிந்ததே. (எ)

## வெள்ளை மாளிகை மீது துப்பாக்கிப் பிரயோகம்

### பத்திரிகையாளர் அறை சேதம்

வாஷிங்டன், ஒக். 31

அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகை மீது நேற்று முன்தினம் நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

பதினைந்து சுற்றுக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த அந்தநபர், அப்பகுதியில் நின்றவர்களினாலும், மாளிகையைக் காவல் புரிந்து வரும் இரகசியப் பாதுகாப்பு அதிகாரிகளினாலும் மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சமயம் அந்த நபர் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்காக ரிவோல்வரில் ரவைகளைப் போட்டுக் கொண்டிருந்தார் என்று சொல்லப்பட்டது.

துப்பாக்கிக் குண்டுகள் வெள்ளை மாளிகையில் உள்ள பத்திரிகையாளர் அறையின் யன்னல்களைச் சேதமாக்கின. எவரும் காயமடையவில்லை. அச்சமயம் ஜனாதிபதி பில் கிளின்ரன் தமது குடும்பத்தினருடன் மாளிகையின் ஓர் அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

வெள்ளை மாளிகை மீது அண்மைக்காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

கடந்த மாதம் வெள்ளை மாளிகையின் முன்னால் உள்ள புல்வெளியில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியது. அதில் ஒருவர் உயிரிழந்தார். (எ)

# ஓய்வூதியக் கொடுப்பனவு தாமதம் குறித்து கவலை

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்குரிய மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக கொடுப்பனவு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

கப்பல் மூலம் வவுச்சர்கள் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்ட போதும், அங்கிருந்து செயலகத்திற்கு அவற்றை எடுத்து வருவதிலேயே காலம் வீண் விரயமாவதாகவும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் — அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பை டிசம்பர் மாதத்துக்கு பின்னரே வழங்க முடியும் என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஆகக் குறைந்த அதிகரிப்பாகிய இருநூறு ரூபாவை உடனடியாக வழங்கி, மிகுதியை பின்னர் நிலுவையாக வழங்கலாம்.

இவ்வாறு சம்மேளனத்தின் செயலாளர் திரு. பி. எஸ். திருச்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையில், ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவை பொறுப்பாளருடன் சம்மேளனத்தினர் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

# சிறிமாவுக்கு ஆதரவு கோரி ரணில் பிரசாரஞ்செய்வாரா?

## ஐ. தே. க. பிரமுகர்கள் முயற்சி

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சிறிமா திஸாநாயக்காவுக்கு ரணில் விக்கிரமசிங்காவின் பூரண ஆதரவைப் பெறுவதில் அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் முழுமூச்சுடன் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ரணில் விக்கிரமசிங்கா இப்போது ஐ. தே. க. பிரதித்தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கிறார்.

காமினி படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் ஐ. தே. க. சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்குள் இவரும் போட்டியிட்டார். எனினும்—காமினியின் மனைவி சிறிமா திஸாநாயக்கா வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இதன் காரணமாக கட்சிக்குள் உட்பூசல் தீவிரமாகியுள்ளது. ரணில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் தீவிரமாக பங்கு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் —

அவரை எப்படியாவது சிறிமாவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுத்த ஐ. தே. க. பிரமுகர்கள் முயற்சி செய்து வருவதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (எ)

# ஜனாதிபதித் தேர்தல்; கணிப்பும் எதிர்பார்ப்பும்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா சுமார் 12 லட்சம் வாக்குகள் பெரும்பான்மை பெற்று வெற்றியீட்டுவார்.

ஆளும் கட்சி வட்டாரங்கள் நடத்திய கணிப்பு ஒன்றை மேற்கோள் காட்டி கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —படுகொலையுண்ட ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவுக்கு பதிலாக அவரது மனைவி சிறிமா ஐ தே. க. வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிக வாக்குகளைத் திரட்டித் தரும் வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதாக ஐ. தே. க பொதுச் செயலாளர் தஹம் விமலசேன கூறியிருக்கிறார். [எ]

## தஞ்சையில் நடைபெறவுள்ள

# உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ. 50கோடி செலவிடப்படும்

## பாதுகாப்புக்கு விசேட திட்டங்கள்

சென்னைஒக். 31

தஞ்சையில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு தமிழக அரசு 50கோடி ரூபாவை செலவு செய்யும் என்று வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி பிரதமர் மற்றும் அயல் நாடுகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ள இம் மாநாட்டில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மிகச்சிறப்பாகச் செய்வதற்காகப் பொலீஸார் விசேஷ திட்டங்களை வகுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செலவுக்கு 50கோடியே 87 லட்சம் ரூபாவை தமிழக அரசு ஒதுக்கி உள்ளது. அதில் இது வரை 45கோடி ரூபா செலவாகிவிட்டது.

23 நாடுகளில் இருந்து 2 ஆயிரத்து 500 தமிழ் பேராசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொள்வர். இவர்களுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மாநாடு நடைபெறும் நாட்களில் தஞ்சை நகரில் "ஒரு பார்ஸல் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் உணவுப் பொட்டலங்கள் பொது மக்களுக்கு விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும் என்றும்—, குடிநீர் பக்கட்டுகளும் இலவசமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

கருணை ஒளியே வழிகாட்டு

சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி
மத்திய மகாவித்தியாலயம்
வேலணை

# பொன் விழாச் சபை அங்குரார்ப்பணம்

காலம்: 01-11-94 செவ்வாய் பி. ப. 2-30மணி

இடம்: பாடசாலை மண்டபம்

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

அதிபர்.

70/20, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (33579)

# பின்போடப்பட்டுள்ளது

**02—11—94** திகதியன்று அதிர்ஷ்டம் பார்க்கப் படவிருந்த எமது நிலைய பாலர்பாடசாலை வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றோம். சீட்டிழுப்புத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நிர்வாகிகள்
மூத்தவிநாயகர் சனசமூகநிலையம்

நல்லூர்,
யாழ்ப்பாணம். (33586)

# பாஷாண உத்வாஷனமும் சபீண்டீகரணமும்

தோற்றம்
11 — 10 — 1926



மறைவு:
21 — 10 — 1994

அமரர்
கந்தையா ஐயர்
## சிவபாதசுந்தரக் குருக்கள்
(கணேசையா, கட்டுவன் மயிலிட்டி தெற்கு)

அவர்களின் பாஷாண உத்வாஷனமும் சபீண்டீகரணமும் திருநெல்வேலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

காலம்:- ✶ பாஷாண உத்வாஷனம் 31-10-1994 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
✶ சபீண்டீகரணம் 01-11-1994 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். அனைவரும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளவும்.

திருமதி பொ. சிவபாதசுந்தரக் குருக்கள்
குடும்பத்தினர்.

''யாழகம்''
பலாலி வீதி,
திருநெல்வேலி. (சி/9568)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
05 — 03 — 1949



உதிர்வு:
23 — 10 — 1992

அமரர்
## வைரமுத்து இலக்மனேஸ்வரன்
(பவா)
(உரிமையாளர், முருகன் கமக்களஞ்சியம், அம்பனை)
எங்கிருந்தாலும் வாழ்க!

அறம் பலசெய்து அருள்வழிகண்டாய்
பிறர் நலமென்றே பேணி வளர்ந்தாய்
உறவெலாம் கூடி உய்து வாழ்ந்தாய்
திறமுடைப் பெரியோன் என்று மகிழ்ந்தார்
பிறவெலாம் மறந்து துறந்து வாழ்ந்தாய்
நிறையுடை மாந்தர் போல வாழ்ந்தாய்
கறைபடா வாழ்வு கண்டுமகிழ்ந்தோம்
மறைவினால் நாங்கள் மனமுடைந்தோமே!
ஓம் சாந்தி!

அன்பு நதாய், சகோதரர்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் (7994)

## புதிய சம்பள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் வருடாந்தச் சம்பளம் ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபாவில் ஆரம்பமாகும். ஆகக் கூடிய சம்பளமாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து 53 ஆயிரம் ரூபாவை இத்தரத்தைச் சேர்ந்தோர் பெறுவர்.

வகுப்பு இரண்டு தரம் ஒன்றில் சேரும் ஆசிரியர்கள் 80 ஆயிரத்து 400 ரூபாவுக்கும் ஒரு லட்சத்து ஆயிரத்து நானூறு ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையை வருடாந்தச் சம்பளமாகப் பெறுவார்கள்.

வகுப்பு இரண்டு, தரம் இரண்டில் உள்ள ஆசிரியர்களின் ஒரு வருட சம்பளம் 53 ஆயிரத்து 880 ரூபாவுக்கும், 77 ஆயிரத்து 280 ரூபாவுக்கும் இடையில் இருக்கும்.

வகுப்பு மூன்று தரம் ஒன்றில் உள்ள ஆசிரியர்கள் 42 ஆயிரத்து 720 ரூபாவுக்கும் 57 ஆயிரத்து 120 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையை மாத வேதனமாகப் பெறுவார்கள்.

வகுப்பு மூன்று தரம் இரண்டைச் சேர்ந்த ஆசிரியர்கள் 32 ஆயிரத்து 520 ரூபாவுக்கும் 42 ஆயிரத்து 820 ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பளத்தைப் பெறுவர்.

(உ-எ)

## பேச்சுவார்த்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான பேச்சுவார்த்தைக்கான முயற்சி தொடர வேண்டும். முதலில் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முன் அவர்கள் நல்லெண்ணத்துடன் எம்முடன் பேசுகின்றனரா என்பதை நாம் தெளிவுபடுத்திய பின்னர் அவர்களுடன் பேச வேண்டும்.

பேசிய பிறகு தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு முன்னர் நாங்கள் எமக்குள் கலந்துரையாடி அவர்களை நம்பமுடியுமா, நாங்கள் அனுப்பும் பொருள்களை அவர்கள் எமக்கு எதிராகப் பயன்படுத்துவார்களா என்பது குறித்து திருப்திப்பட்ட பின்னரே பேச்சுக்களைத் தொடர வேண்டும்.

யுத்தம் மூலமான தீர்வு சரியில்லாதது என்று நான் கூறவில்லை. அரசியல் தீர்வு காணமுடியுமா இல்லையா என்பதை நாங்களே தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு எம். எச். முகம்மது பதிலளித்தார்.

## சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடங்கலின்றி பூரணமாகச் செய்து கொடுக்கப்படவேண்டும்.

எல்லா மக்களும் சமமாக மதிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய வசதிகளும், வாய்ப்புகளும் வழங்கப்படுவது அவசியம். அப்போது இப்போதுள்ள சகல பிரச்சினைகளும் தீரும்.

இதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் —என்றார்.

(அ)

# காணவில்லை

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட
**சுப்பிரமணியம் பேரின்பமணியம்**

வயது 40. இவர் 27-10-94 வியாழக்கிழமை விறகுக்காக, பளைக்கு சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் என்னுடன் அல்லது அருகில் உள்ள காவல் பணிமனையில் தொடர்புகொள்ளவும்.

விலாசம்;
திருமதி. பே. மகேஸ்வரி
பொன்னையா, லேன்,
ஆனைக்கோட்டை.

(33388)

யாழ். மத்திய கல்லூரியின்
# உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்: பிற்பகல் 2-15க்கு

**S.M. FERNANDO** ஆதரவில்

**ST. JOHNS** VS **J / CENTRAL**

(33583)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை — வேலணைப் பிரிவு

30-10-94 ஆம் திகதி எமது பிரிவினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள்.

1 ஆம் பரிசு: **0554**
2 ஆம் பரிசு: **3751**
3 ஆம் பரிசு: **3717**

ஆறுதல் பரிசில் இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 3769 | 4012 | 3218 | 5516 |
| 0501 | 4285 | 4163 | 2664 |
| 3290 | 4470 | | |

இதற்குரிய பரிசில்களை 10-11-94 முதல் 30-11-94க் கிடையில் பழம் றோட் கந்தர்மடத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. மகாலிங்கம்
பொருளாளர்

(33582)

# LONDON ACCOUNTANCY CLASSES
MAY – JUNE – 1995

C. I. M. A – Stage I
(புதிய பாடத்திட்டத்திற்கமைய)
&
A. A. T – Prelim & Inter

ஆரம்பம்: **05-11-1994**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. PETER'S LANE, JAFFNA.

[C-9564]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் ... கத்திலுள்ள அச்சகத்தில் 31—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகாலச்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானத்தை நாடாளுமன்றம் விரும்பினால் எடுக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காமினி கொலையை அடுத்து பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகலச் சட்டம் புதன்கிழமை 2 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது.

முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது குறித்து அறிவிக்கப்படும்.

ஆனால் அதனை நீடிக்கக் கோரும் பிரேரணை சமர்ப்பிக்கப்படமாட்டாது. இப்போதைய நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை என்று கருதப்படுகிறது. —என நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## ஜே. ஆரின் கீழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விப்புகளில் இருந்து தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் சிலர் நடத்திய சில காடைத்தனங்களை 'சில வெளியாரின்' செயல்கள் என்று ரணில் கண்டித்துள்ளார்.

கீழ்த்தர தந்திரோபாயத்துக்குப் பேர்போன — ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து செயற்பட்ட — ஒருவரையே இது குறிக்கின்றது.

நாட்டில் இனவெறிக்கு மீண்டும் தூபம் போட தற்போது எடுத்துவரும் முயற்சி கீழ்த்தர தந்திரோபாய நடவடிக்கைகளுக்கு பேர் இன்னொரு எஜமானனை நினைவுபடுத்துகிறது.

அவர் பண்டா — செல்வா ஒப்பந்தத்தை குழப்பியடிக்க பிளவுபட்ட இலங்கையின் படத்தை எடுத்துக் கொண்டு நாடு முழுவதும் சென்று வந்தவர்.

டி.எஸ். சேனநாயக்காவினால் உருவாக்கப்பட்ட பெருமைமிக்க ஐக்கிய தேசியக் கட்சி இப்படியான குழப்பக்காரர்களுக்கு இடமளிப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. இந்த குழப்பக்காரர்கள் மரணம், கண்ணீர், மற்றும் கைம்மை ஆகியவற்றை முன்வைத்து லாபம் தேட முயற்சிக்கின்றனர்.

ஸ்ரீகோதா சென்ற ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்டனர். அங்கு சென்ற முன்னாள் பிரதமரும் தாக்குதலுக்காளானார்.

இது போன்று ''ஐலண்ட்'' படப்பிடிப்பாளர் மிகமிக முக்கிய பிரமுகர் (VVIP) ஒருவரின் புதல்வனான பால்ய காடையனால் தாக்கப்பட்டார்.

இனவெறியை தூண்டுவதற்கு நடத்தப்படும் இம்முயற்சி நாட்டை இன்னொரு தடவை குழப்பத்தில் ஆழ்த்தும். இக்கபட சக்திகளின் செயல்பாடு அரசாங்கத்திற்கு தெரியும். இதனைச் சந்திக்க அரசு தயாராக இருக்கிறது.

இவ்வாறு அந்த ஆசிரியர் தலைங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே. ஆர்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை எங்கள் நாட்டில் இருந்து பிரித்து ஒதுக்கியது ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கமே.

1983 ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலையை மறக்கவே இயலாது. 1981 இல் யாழ். பொது நூலகம் எரிக்கப் பட்டது. யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் குழப்பப்பட்டது. தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய ஜனநாயக மனித உரிமைகளை ஐ.தே.க. அரசு அழித்தொழித்தது.

இன்று நடக்கும் இனப்போரை தோற்றுவித்ததே ஐ.தே.க, அரசு தான். இவற்றுக்குக் காரணமான, ஜெயவர்த்தனா, பிரேமதாஸா, காமினி திஸாநாயக்கா ஆகிய தலைவர்களின் ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளை மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

ஐ.தே.க. தோற்றுவித்த இந்த அரசபயங்கரவாதத்தையும் கொலைகார அரசியல்கலாசாரத்தையும் புதைத்துவிட்டு ஜனநாயகத்தை மீண்டும் புனரமைத்து மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பேற்படுத்துவதும் —

நீதி, நியாயத்துக்குக் கட்டுப்பட்ட அரசாங்கத்தை அமைப்பதுமே — எங்களின் விசுவாசமான நோக்கமாகும்.

இது இலகுவான செயல் அல்ல என்பதை நாம் அறிவோம்.

கொலைகார அரசியல் பலத்தைக் கொண்டு கோடிக்கணக்கான ரூபா பணத்தை சம்பாதித்தவர்கள் எங்கள் நோக்கத்துக்கு எதிரானவர்கள் என்பது எனக்குத் தெரியும் — என்று கூறினார்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 31 யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பகல் 2-15 மணிக்கு வ... கோட்டை யாழ்ப்பாண... ஊரி மைதானத்தில் ஆ...மாகவுள்ளது.

Service of Rememberence and Thanks Givi...
for the Life and Ministry of

**Revd. Dr. KINGSLEY T. MUTHAIA**
President, Methodist Church – Srilanka

அருட்திரு. கலாநிதி கிங்ஸ்லி
## தேசிகநேசன் முத்தையா
திருப்பேரவைத் தலைவர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை

அவர்களின் வாழ்வையும் – திருப்பணியையும் – தலைமைத்துவத்தையும் நினைவுகூரும் நன்... (ஸ்தோத்திர) வழிபாடு.

அருட்திரு. கலாநிதி கிங்ஸ்லி தேசிகநேச... முத்தையா அவர்கள் 29-10-1994 அன்று மாலை... கொழும்பில் இறைமகிமைக்குள் – மகிமைப் பிரவேச... அடைந்தார். அன்னாரின் வாழ்வையும், திருப்பணியையும் – தலைமைத்துவத்தையும் நினைவுகூர்ந்து... இறைவனுக்கு நன்றிசெலுத்தும் வழிபாடு 02-11-199... (புதன்கிழமை) மாலை 3. 30 மணிக்கு பரு./கட்டை... வேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும். இவ்வ... வித்தலை அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளவு...

தகவல்;
அருட்திரு. **B.J.** மேத...

Circuit Superintendent,
Methodist Church,
Pt.pedro – Kaddaivelly Circuit.

(3358...

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா திருஞானச்சந்திர...

காலஞ்சென்ற நா. கந்தையா திருமதி கந்தை... தங்கம்மா அவர்களின் மகனும், காலஞ்சென்ற ... திருமதி வைரவப்பிள்ளை அவர்களின் மருமகனு... தெல்லிப்பளை மேற்கைச் சேர்ந்தவருமாகிய ... ஞானச்சந்திரன் (கணக்காளர்) லண்டனில் காலமானார்.

இவர் தயாளகுணேஸ்வரியின் அன்புக் கணவரு... திருநயனி, தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையு... பாலச்சந்திரன், செல்வகுணச்சந்திரன், குமாரச்சந்திரன், சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரனு... சண்முகராசாவின் மைத்துனருமாவார்.

இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. சண்முகராஜ...

இராசதுரை வீதி,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (3358...

## இராமுப்பிள்ளை கந்தையா

இராமுப்பிள்ளை கந்தையா 30-10-94 இல் கா... மானார்.

இவர் தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபன... சுன்னாகம் தச்சுத் தொழிற்சாலையில் பணிபுரிந்... வரும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி இராமு... பிள்ளை, பொன்னாச்சியின் கனிஷ்ட புத்திரனு... திருமதி சின்னமணியின் அன்புக்கணவரும், விஸ்வேஸ்வ... [அக்கம்மா], விஸ்வேஸ்வரன் [இ.மி. சபையில் ப... புரிந்தவர்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் [புண்ணிய... C. T. B.), கௌசலாதேவி [ராசு], விமலேஸ்... [குலம், பிரான்ஸ்], உருத்திரகுமாரி [சுரிதா, பிரான்... ஆகியோரின் தந்தையும், தியாகராஜா, கந்தசா... [ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா], திருமதி ஞானே... வரி, விமலநாதன் [பிரான்ஸ்], விக்னராஜா [பிரான்ஸ்... திருமதி ஜெயலக்சுமி [மீனா, பிரான்ஸ்] ஆகியோரி... மாமனாரும், சுதந்திரா [யாழ். கல்வித்திணைக்களம்... சுதர்னன் [பிரான்ஸ்], சுதர்சன், சுஜாத்தன், உமே... காந், கஜபாரதி, சதீஸ்வரன், துளசி, கீதானுகேசவ... செந்தூரன், சுமங்கலி, சஞ்சீவன் [பிரான்ஸ்... வலன்டின் [பிரான்ஸ்], வைஷ்ணவி [பிரான்ஸ்] ஆ... யோரின் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 31-10-94 இன்று கா... 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தி... தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறி... தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொ... ளவும்.

தகவல்:
மனைவி,
மக்கள்,
மருமக்கள்

24/5, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். [33587]

திருமதி
## தங்கச்சிஅம்மா மயில்வாகன...

யாழ். ஓட்டுமடம் அராலி வீதியைச் சேர்... காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவி ... கச்சி அம்மா நேற்றுக் காலமானார்.

அன்னார் நித்தியலட்சுமி, தெய்வேந்திரம் ... யோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ... மணர் மற்றும் பவானியம்மா ஆகியோரின் ... மாமியாரும், ஆனந்ததேவி, ஓங்காரமூர்த்தி, புவ... திரன், விஜேந்திரன், பற்குணதேவி, கலாநிதி, ... தரன், மஞ்சுளாநிதி, கிரிதரன், பகீதரன் ஆகி... ரின் அன்புப் பேர்த்தியும், கிரிசாந்தி, அனுசா... சம்யுதா, சாம்பவி, தாட்சாயினி, துளசிதா, ... ஷன், கௌசிகன், தர்மினி, விபூஷன் ஆகியோ... பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31-10... திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னா... இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி... காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்து... செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்... ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எல். ஓங்காரமூர்த்...

27, அராலி வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (3358...